4. விதி 110-ன்கீழ் 25-4-2013 அன்று அறிவிக்கப்பட்ட புதிய மின் திட்டங்களின் மதிப்பீட்டுத் தொகை முதலமைச்சரின்—விளக்கம்

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவை எய்தும் வகையில் பல்வேறு புதிய மின் திட்டங்களின் விவரங்களை 25-4-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் நான் அறிவித்தேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை பல்வேறு நாளிதழ்களில் வெவ்வேறுவிதமாக வெளிவந்துள்ளன. எனவே, புதிய திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதைத் தமிழக மக்கள் சரியாக அறிந்துகொள்ளும் வகையில், கீழ்க்காணும் விவரங்களை இந்த மாமன்றத்தின்மூலம் தெரிவிக்க விழைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகா வாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட 10 துணை மின் நிலையங்கள், 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 16 துணை மின் நிலையங்கள், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட 19 துணை மின் நிலையங்கள், 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட 11 துணை மின் நிலையங்கள், என 56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டம் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 20,000 புதிய மின் மாற்றிகள் அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்கள் அமைக்கும் திட்டம் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்திருந்தேன். மொத்தத்தில் 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்காணும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்ற விளக்கத்தை நான் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சென்னை, வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய பாதையிலே இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நாளைய நாட்டை உருவாக்குவதுதான் ஓர் அறிவார்ந்த தலைமையின் அணிகலனாக இருக்க முடியும். அந்தவகையிலே அறிவார்ந்த தலைமையோடு நித்தம், நித்தம் புதிய தமிழகத்தை உருவாக்கி வருகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு நாளும் 110-வது விதியின்கீழ் தமிழகத்தின் தலைவிதியையே தலைகீழாகப் புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-15

வளர்ந்துவரும் சென்னை மாநகரத்தின் மக்கள்தொகையைக் கருத்திற்கொண்டு அதன் தேவைகளை உணர்ந்து, வீட்டு வசதியானாலும், மின்சார வசதியானாலும், போக்குவரத்து வசதியானாலும், சாலை வசதியானாலும் அதற்கு மேலே ஒரு புறநகரையே தோற்றுவிக்கிற அப்படிப்பட்ட ஒரு புதிய திட்டமானாலும், பல்வேறு திட்டங்களைப் போற்றுதற்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே கோயம்பேடு பேருந்து நிலையத்தை உருவாக்கியவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுவும், அது எவ்வளவு விரைவாக உருவாக்கப்பட்டது என்ற வரலாறை மறந்துவிட முடியாது. சென்னை மாநகரம் இன்றைக்கு இந்தியாவின் இரண்டாவது மாநகரமாக உருவாகிற சூழ்நிலை இருக்கின்றது. அடித்தளத்து மக்கள் வசிக்கின்ற கூவம் பகுதிகளிலே இருக்கின்ற, அந்தப் புறநகர்ப் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குப்பங்கள் உருவாகி மிக அதிகமான மக்கள் நெருக்கடிக்கு ஆளாகி உள்ளனர். ஏறக்குறைய 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளோ, மகிழுந்துகளோ அல்லது இரு சக்கர வாகனங்களோ புதிது புதிதாக ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இங்கே இருக்கின்ற அந்த பதிவு நிலையங்களிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. அவ்வளவு நெருக்கடிக்கும் இன்றைக்குத் தீர்வு காணுகின்ற வகையிலே, வண்டலூர் பகுதியில், வண்டலூர் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகிலே மாபெரும் பேருந்து நிலையத்தை உருவாக்கி, புறநகர் மக்களுக்கு மட்டுமல்ல, சென்னை மாநகர மக்களுக்கும் அந்த நெருக்கடியை தீர்த்துவைக்கிற வகையில் இன்றைக்கு திட்டமிட்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்களுடைய இந்த நல்ல திட்டத்தை வரவேற்று, நன்றி பாராட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் விதி 110-ன்கீழ் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, இதை நாம் எப்படி தவிர்க்க வேண்டும் என்பதைப் பற்றி எப்படி சிந்தித்திருக்கின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் புறநகரிலே வண்டலூர் அருகே ஒரு பேருந்து நிலையம் அமைக்க இருக்கின்ற சிறப்பான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நான் வியந்து பார்க்கின்றேன். அவர்களுக்கு எப்படி இவ்வளவு நேரம் கிடைக்கின்றது, எங்கெங்கு நெரிசல் இருக்கின்றது, எங்கெங்கு மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை வாகனங்கள் வந்து போகின்றன, இவற்றையெல்லாம் எப்படி கணக்கு வைத்திருக்கின்றார்கள் என்று பார்க்கும்போது, அந்த Database-ஸே அவருடைய விரல் நுனியிலே இருந்துகொண்டிருக்கின்றது என்றுதான் நாம் சொல்ல வேண்டும். மக்கள் துன்பப்படுவதைச் சிறப்பாக உணர்ந்திருக்கிறார். ஏனென்றால் urban population has almost increased by 58%. கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், 10 வீடுகள் இருந்த சாலைகளில் எல்லாம் இன்றைக்கு 10 Flats-களாக மாறி அவை 20, 30 வீடுகளாக மாறி, ஒரு வீட்டிற்கு ஒரு கார் இருந்த காலம் மாறி, இப்போது ஒரு வீட்டிற்கு 4 கார்கள் என்ற முறை வந்து, இன்று நெரிசல் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இதை எப்படி தவிர்க்க வேண்டும் என்று எண்ணுகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் துணை நகரங்களை உருவாக்க வேண்டும் என்று 2023 தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் Satellite towns should be created in Tamilnadu என்ற சிறப்பான செய்தியை அவர்கள் அறிவித்து அதை நடத்தியும் வருகிறார்கள். ஆகவே, இந்த போக்குவரத்து நெரிசலைப் பற்றி காலையில் நாம் காரில் வந்துகொண்டிருக்கும்போதே, பல இடங்களில் மக்கள் அன்றாடம் சொல்வது, ‘மிக நெரிசலாக இருக்கின்றதே இதை எப்படி தவிர்க்கப் போகின்றார்கள்’

2013 *ஏப்ரல்* 30] [*திரு. ரா. சரத்குமார்*]

என்பதுதான். இதற்கு முக்கிய காரணங்கள் பல இருந்தாலும், கோயம்பேடு பஸ் நிலையம் ஒரு போக்குவரத்து நெரிசலை உண்டு பண்ணிக்கொண்டிருக்கின்றது என்பதை உன்னிப்பாக கவனித்து, வண்டலூரில் புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைப்பது மட்டுமல்ல, பயணிகளுக்கு ஏதுவாக அங்கு உணவகம், கழிப்பிடம் போன்ற அனைத்து வசதிகளையும் அளித்து, அங்கே வாகனங்களை நிறுத்துவதற்கும் இடம் அளித்து, வாகனங்களை அங்கே நிறுத்திவிட்டு அவர்கள் அங்கிருந்துகூட சென்னை நகருக்கு வருவதற்கு ஏதுவாகக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்திருக்கின்றார்கள். ஆகவே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு உண்மையான, ஒரு சிறப்பான முடிவை எடுத்து, இடம் இல்லாத சென்னையில் படிப்படியாக அனைவரும் 50, 100 கிலோமீட்டர் தூரத்திலே சென்று வாழ்வதற்கும் சிறப்பான வசதிகளையும் செய்து தருவதற்கு ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். ஆகவே, இந்த 110-வது விதியின்கீழ் கோயம்பேடு பேருந்து நிலையத்தின் ஒரு பகுதி மாற்றப்பட்டு, தென் மாவட்டங்களிலிருந்து வருகின்ற பேருந்துகளுக்காக வண்டலூர் அருகே புதியதாக ஒரு பேருந்து நிலையம் கட்டப்படும் என்ற செய்தியை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழே தென் தமிழகத்திற்குச் செல்லக்கூடிய பேருந்துகளுக்காக புறநகர் பேருந்து நிலையம் ஒன்றை சிறப்பான வசதிகளுடன் வண்டலூர் இரயில் நிலையத்திற்கு அருகில் அமைக்கப்படும் என்று அளித்த அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக உளமாற நான் வரவேற்கின்றேன்.*

முற்பகல் 11-20

மாலை நேரங்களிலே கோயம்பேடு பகுதிக்குச் சென்றால் எத்தனை மணி நேரத்திலே நாம் அந்தப் பகுதியைவிட்டுக் கடந்து செல்ல முடியும் என்று யாருமே சொல்ல முடியாத அளவிற்கு மிகப் பெரிய நெரிசல் அங்கே காணப்படுவது யதார்த்தமான

உண்மை. அதைப் பலமுறை நாம் அனைவரும் அனுபவித்திருப்போம். இத்தகைய ஒரு கஷ்டத்தை, துயரத்தை, சங்கடத்தைத் தீர்க்கக்கூடிய வகையிலே வண்டலூர் புறநகர் பேருந்து நிலையம் நிச்சயமாக அமையும். அதேநேரத்தில், மிகச் சிறப்பான முறையிலே திட்டங்களைத் தீட்டக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய பேருந்து நிலையத்திலே வந்து இறங்கக்கூடிய பயணிகள் சென்னை நகருக்கு வருவதற்கும், சென்னை நகரிலிருந்து பஸ்களில் புறப்படுவதற்கு செல்லக்கூடிய பயணிகள் அங்கே செல்வதற்கும் மிகச் சிறப்பான முறையிலே நகரப் பேருந்து வசதிகளையும் நிச்சயமாக விரிவுபடுத்துவதற்கு திட்டம் தீட்டித் தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இன்றைய அறிவிப்பை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் புதிய திட்டத்தை இன்று தந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் அவரை வாழ்த்துகிறேன். உண்மையிலேயே practical ஆக அவர்கள் செய்திருக்கிறார்கள். தென் மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய பேருந்துகள் தக்க நேரத்தில் வந்து சேர முடியவில்லை. சென்னையிலிருந்துகூட பேருந்து நிலையத்திற்குப் போக முடியாது. ஆட்டோவில்தான் போக முடியும். பஸ்களில்கூட போகமுடியாது. காரில்கூட போக முடியாது. இந்தக் கஷ்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதுதான் உண்மை. மக்கள் கஷ்டப்படுகிறார்கள், அந்தக் கஷ்டத்தைப் போக்கவேண்டும் என்பதற்காகத்தான் வண்டலூரிலே ஒரு புறநிலையப் பேருந்து நிலையத்தை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். Vandalur is a suitable place; எல்லா வசதிகளும் அங்கே கொடுக்கப்படவுள்ளன. கழிப்பிட வசதி, வாகனங்களை park செய்யக்கூடிய வசதி, தனியார் பேருந்துகளை நிறுத்தக்கூடிய இடம், அனைத்தையும் சேர்த்து எல்லா வசதிகளுடன் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள், தரவிருக்கிறார்கள். மக்களுடைய பல பயன்களைப் புரிந்து, தொலைதூர பார்வையோடு இதைச் செய்ய வேண்டும். குறிப்பாக தமிழகம் மற்ற மாநிலங்களைவிட வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமே

2013 ஏப்ரல் 30] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் கேரளாவிலிருந்து வரும் நண்பர்கள் என்னிடம் சொல்வார்கள், எனது மாவட்டத்திலிருந்து வரும் நண்பர்கள் சொல்வார்கள் 'தமிழகம் அதிகமாக வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறது, அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கிறோம், புதிய புதிய திட்டங்களைத் தந்துகொண்டிருக்கிறார்கள்' என்று சொல்வார்கள். ஆகவே, மதிப்போடு போற்றக் கடமைப்பட்டிருக்கின்றேன் என்ற வகையிலே நான் வாழ்த்துகிறேன். ஏனென்றால் கேரளாவிலிருந்து ஆட்கள் இங்கே வேலை தேடி வருகிறார்கள், வெளி மாநிலங்களிலிருந்து ஆட்கள் இங்கே வேலை தேடி வருகிறார்கள். பல்வேறு பணிகளைச் செய்கிறார்கள். வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் வந்து போவதற்கு, தமிழகம் வாழ்வதற்கு, இந்தப் பகுதி உயர்வடைவதற்கு, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே தீட்டப்பட்டிருக்கக்கூடிய இத்திட்டத்தை வாழ்த்தி, வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை மாநகரம் மற்றும் இதர மாவட்டங்களில் பெருகிவரும் பேருந்து நெருக்கம், ஜனத்தொகை பெருக்கம், தென்மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய பேருந்துகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இத்திட்டத்தை அறிவித்துள்ளார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வரக்கூடிய கோயம்பேடு பேருந்து நிலையம் உள்ள பகுதிகளில் இன்றையதினம் நெருக்கடியின் காரணமாக பேருந்துகளெல்லாம் 10 கி.மீ. வேகத்தில்தான் செல்லக்கூடிய ஒரு அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இதனால் எரிபொருள் மற்றும் நேரம் விரயமாவதோடு, மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல முடியாத ஒரு அவல நிலை இருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, கோயம்பேடு பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியை மாற்றி, தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய வாகனங்கள் ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், வண்டலூர் இரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையத்தை ஏற்படுத்துவதற்கான அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

[திரு. எம். ஆறுமுகம்] [2013 ஏப்ரல் 30

முற்பகல் 11-25

தமிழகம் இன்றையதினம் நகரமயமாகிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தினுடைய தலைநகரம் சென்னை மாநகரத்தை வளர்ச்சி பெற்ற மாநகரமாக, அனைவரும் வந்து செல்லக்கூடிய முறையிலே அவர்கள் சிந்தித்து, எதிர்காலத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, சென்னை மற்றும் தமிழகம் எப்படி இருக்க வேண்டுமென்பதையெல்லாம் அடிப்படையிலே சிந்தித்து எடுத்திருக்கக்கூடிய இந்த நடவடிக்கை பாராட்டுதலுக்குரியது மட்டுமல்ல, விபத்துகளையும் தடுக்கும். அதேபோல, எந்த இடத்திற்கும் சுலபமாக எந்த நேரத்திலும் சென்றுவிடலாம். அதே நேரத்தில் மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல தமிழகத்தை மாற்றுவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து வரக்கூடிய நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த 12 ஆண்டு கால ஆட்சியில், நகர்ப்புறங்கள் மிகப் பெரிய அளவிலே வளர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம், உலகளவிலே இருக்கின்ற தொழில்முனைவோர்களை வரவழைத்து பல்வேறு தொழிற்சாலைகளை நகர்ப்புறப் பகுதிகளிலே கொண்டுவரப்பட்டது மட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே ஒரு மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்கள் நல்ல கல்வியைக் கற்ற காரணத்தினால், கல்வி கற்ற பின்பு, பணி தேடி வருகின்ற சூழ்நிலையில் அவர்கள் தொழிற்சாலைகளைத் தேடி வருகின்றபோது, ஏற்கெனவே பெருகிவரும் நகரங்களால் வளர்ந்து இப்போது 48.5 விழுக்காடு அளவுக்கு நகர்ப்பகுதி மேம்பட்டிருக்கிறது. இன்னும் 10 ஆண்டுகள் சென்றால் அது 60 விழுக்காடுகளாக உயரக்கூடிய சூழ்நிலை உள்ளது.

2013 ஏப்ரல் 30] [திரு. கே.பி. முனுசாமி]

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதும் தம் மக்களையே சிந்தித்து, மக்களுடைய எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு, தொலைநோக்குச் சிந்தனையோடு (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த முறை ஆட்சியிலே இருந்தபோது, ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய பேருந்து நிலையத்தை உருவாக்கினார்கள். இப்போது மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த வண்டலூர் புறநகர் பேருந்து நிலையம் ஆசிய கண்டத்திலே மட்டுமல்ல, உலக அளவிலேயே தலைசிறந்த பேருந்து நிலையமாக மாறும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், என்னுடைய அன்னையினுடைய மனது விசாலமானது. எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். செல்லுகின்ற பாதையில்கூட அவர்கள் மகிழ்ச்சியாகச் செல்ல வேண்டும். ஓடுகின்ற பேருந்தில்கூட அவர்கள் மகிழ்ச்சியாகச் செல்ல வேண்டும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு இந்தப் பேருந்து நிலையத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்தில் வேறெங்கும் ஊராட்சிகளில் நவீன பேருந்து நிலையங்கள் இருப்பதாக வரலாறு இல்லையென்று நான் கருதுகிறேன். இந்த நிதியாண்டில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 16 ஊராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்களை உருவாக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி தொலைநோக்குச் சிந்தனையோடு எல்லா திட்டங்களையும் அறிவிக்கிறார்கள். இன்று சென்னை மாநகரம் வளர்ந்திருக்கிறதென்று தேசிய இயக்கத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர், நண்பர் திரு. பிரின்ஸ் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாநிலத்தைவிட தமிழகம் எல்லா வகைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் உண்மையிலேயே ஏற்றுக்கொள்கிறேன். மாற்று இடத்திலே இருக்கின்றவர்கள் இன்று வாழ்த்துகின்ற நிலையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். மேலும், நாளை அந்த இடத்திலேயிருந்து இன்னும் இந்த இந்தியத்

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 30

திருநாட்டை உயர் நிலைக்குக் கொண்டு செல்வதற்கு நிச்சயமாக வருவார்கள் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும் என் துறையின் சார்பிலும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பவர் அரசியல்வாதி. அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திப்பவர் அரசியல் ஞானி. அப்படி அரசியல் ஞானியாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த தலைமுறை சிறப்பாக வாழவேண்டுமென்று அனைத்துத் துறைகளிலும் தொலைநோக்குச் சிந்தனையோடு எங்கள் அம்மா அவர்கள் திட்டமிட்டு செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் 90 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இன்னும் 10 ஆண்டு காலத்தில் ஒரு கோடியே 25 இலட்சம் மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்மாவின் பொற்கரங்களால் கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் திறக்கப்பட்டது. மூன்றாவது முறையாக முதலமைச்சராகி, தென் மாவட்டங்களிலிருந்து வருகின்ற வாகனப் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு, அம்மாவின் இலட்சியத் திட்டமான 'விஷன் 2023'-ஐ அறிவித்து, ஒவ்வொரு சராசரி மனிதனும் 10 ஆயிரம் அமெரிக்கன் டாலர் வருமானத்தை ஈட்டக்கூடிய அளவில் தமிழ்நாட்டை உருவாக்குவேன் என்று திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அடித்தளம் அமைக்கின்ற வகையில், வருங்காலத்தில் சென்னைப் பெருநகரத்தில் மக்கள்தொகை அதிகமாக ஏற்படும் என்பதை மனதில் கொண்டு, வண்டலூரில் ஒரு புதிய பேருந்து நிலையம் எல்லா வசதிகளுடன் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வீட்டு வசதி மற்றும் பெருநகர வளர்ச்சித் துறையின் சார்பில் எனது நன்றியை பொற்பாதங்களில் சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருளை ஒளி வெல்லும்; வறுமையை செல்வம் வெல்லும்; மடமையை பகுத்தறிவு வெல்லும்; கல்லாமையை கல்வி வெல்லும்; சோம்பலை உழைப்பு வெல்லும்; துன்பத்தை இன்பம் வெல்லும். தாயே! 7 கோடி தமிழர்களின் மனதை தங்களால் மட்டுமே வெல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்ப, வாகன எண்ணிக்கையின் உயர்விற்கேற்ப, மக்கள் நலனே தன் நலன் என அல்லும் பகலும் அயராது உழைத்து தொலைநோக்குப் பார்வையோடு வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் வழங்கிய தாயே! உலகைப் பார்த்து வாழ்பவர் சராசரி மனிதர், உலகமே பார்க்க வாழ்பவர் சாதனை மனிதர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18-11-2002 அன்று கோயம்பேடு பேருந்து நிலையத்தை திறந்து வைத்து வரலாறு படைத்தார்கள். இன்று வண்டலூரில் புறநகர் பேருந்து நிலையம் என்னும் வரலாற்றுச் சாதனை திட்டத்தை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து வணங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்தில் போக்குவரத்துச் சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் போக்குவரத்துச் சேவையைப் பொதுமக்களுக்கு அளிப்பதில் பேருந்துகள் முக்கிய பங்காற்றுகின்றன. மாநிலத்தில் பெருகி வரும் மக்கள்தொகைக்கேற்ப கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் விரிவடைந்து வருகின்றன. போக்குவரத்து ஒன்றே விரிவடையும் பகுதிகளை ஏனைய பகுதியுடன் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. சென்னை மாநகரத்தின் கோயம்பேடு பகுதியிலே 37 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பேருந்து நிலையம் ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும். 2 இலட்சம் பயணிகளைக்*

கையாளும் திறன் கொண்ட இப்பேருந்து நிலையம், 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. போக்குவரத்து நெரிசலை கருத்திலே கொண்டு, பயணிகள் பயனுறும் வகையிலே வண்டலூரிலே மற்றொரு புறநகர் பேருந்து நிலையத்தினை அமைத்திட மாட்சிமை மிகுந்த ஆட்சியை வழங்கும் தமிழகத்தின் ஒளிக்கீற்று, காவேரி வெற்றி தந்த காவியத் தலைவி, இமயத்தின் சிகரம், காலமெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வாழ்விக்கும் கற்பக விருட்சம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சிறப்பான அறிவிப்பினை இன்று வெளியிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள நன்றியோடு என்னுடைய நன்றியையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

6. அறிவிப்பு

தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையிலே அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*